வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 76 of 2020

வழக்கு சாட்சி - PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாலவிக்னேஷ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | மணி | வயது | : | |
| கிராமம் | : | ராசாகவுடண்டன்பாளையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.06.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 03.06.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து IT ல் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் ஜெகதீசன், பூபதி ஆகியோர்களை தெரியும். கடந்த 07.04.2019 ஆம் தேதி மாலை 3.00 மணியளவில் நானும், எனது சித்தப்பா மகன் குணசேகரனும் வீட்டிலிருந்தோம். அப்போது எனது தம்பி பூபதி அவரது அம்மா லலிதா சத்தம்போட்டுக்கொண்டு ஓடினார்கள். அதை பார்த்து நானும், எனது தம்பியும் பின்னாடி சென்று பார்த்தபோது அங்கு ஆஜர் எதிரிகள் மூவரும் நின்று கொண்டிருந்தார்கள். சித்தி லலிதா எதற்காக மகன் வண்டியை பிடித்து வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படி தாண்டி பிடித்து வைத்திருப்போம் என்று தேவடியா முண்ட என்று சொன்னார்கள். தம்பி ஜெகதீசன் எதற்காக எனது அம்மாவை வார்த்தையால் பேசினாய் என்று கேட்டதற்கு பழினிச்சாமி ஜெகதீசனை கன்னத்தில் அறைந்தார். அதை நானும், எனது தம்பி குணசேகரனும் தடுக்க சென்றபோது சங்கர் எனது கழுத்தை பிடித்து தள்ளிவிட்டு காலில் உதைத்துவிட்டார். கெட்ட வார்த்தையால் திட்டி உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

2) எனது சித்தி கேட்டதற்கு அவரை பழனிச்சாமி கன்னத்தில் அடித்துவிட்டார். எனது சித்தி சத்தம்போட்டவுடன் ஊர்காரர்கள் வந்துவிட்டார்கள். எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். ஓடும்போது உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு ஓடினார்கள். பிறகு நாங்கள் மூவரும் பல்லடம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில்

சேர்ந்தோம். இது சம்மந்தமாக எனது அண்ணன் ஜெகதீசன் போலீசில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் சம்பவத்தன்று மாலை 6.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால் புகார் கொடுத்தபோது காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு விசாரிக்கவில்லை என்றால் புகார் கொடுத்த அன்று இரவு விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு இன்று தான் சாட்சி சொல்ல வருகிறேன் என்றால் சரிதான். யார் யார் புகார் கொடுக்க சென்றோம் என்றால் நான், எனது தம்பி ஜெகதீசன், எனது சித்தி, தம்பி பூபதி ஆகியோர்கள் சென்றோம்.

4) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து எங்களது ஊர் ஒரு கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சத்தம்போட்டு கூப்பிட்டால் ஊர்காரர்கள் வரமுடியாது என்றால் சரியல்ல. பூபதி ஓடி வந்து தகவல் சொன்னார். எத்தனை மணிக்கு வந்து தகவல் சொன்னார் என்றால் 4.00 மணி இருக்கும். எனக்கு முன்னால் எனது அப்பா, அம்மா சென்றார்கள் என்றால் நான், எனது அப்பா, அம்மா, தம்பி அனைவரும் ஒன்றாக ஓடி தான் சென்றோம். ஜெகதீசனின் அப்பா அம்மா முன்னாடி சென்றுவிட்டார்களா என்றால் எல்லாரும் ஒன்றாக தான் சென்றோம். கன்னத்தில் அறைந்தார் என்று சொல்வதற்கு எந்த கன்னத்தில் அறைந்தார், காலில் லலிதாவை எங்கு உதைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

5) எதிரி பழனிச்சாமிக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். ஈஸ்வரன் தான் அடித்து கீழே தள்ளி காயத்தை ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு நான் சென்றதால் ஈஸ்வரன் எதிரி பழனிச்சாமியை அடித்தாரா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் ரோட்டில் எந்த பக்கத்தில் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ரோட்டில் நடந்தது. ரோட்டின் வலது புறம் ஆகும். குறிப்பிட்டு எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் கேட்டிற்கு நேர் எதிரே சம்பவம் நடந்தது. எனக்கு இரத்த காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சாட்சி தனது கழுத்தை காண்பித்து கழுத்தில் லேசான காயம் ஏற்பட்டதாக கூறுகிறார்.

மருத்துவமனையில் எவ்வளவு நாட்கள் சிகிச்சையில் இருந்தேன், எத்தனை நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

6) மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்த போது 6 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் எனக்கு வயது 16 இருக்கும் என்றால் சரிதான். அப்போது எனது அப்பா என்னுடன் வந்தாரா என்றால் பின்னர் சம்பவ இடம் வந்தார். மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றது என்றால் நான், எனது தம்பி, எனது சித்தி ஆகியோர்கள் அப்பா வாகனத்திலும், சித்தப்பா கருப்புசாமி வாகனத்திலும் சென்றோம். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனது தம்பியை அடித்த பின்னிட்டு வந்தேன். சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் வழக்கில் சொல்லப்பட்டுள்ள சம்பவ இடத்திற்கு நான் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், வழக்கில் சொல்லப்பட்டுள்ள எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், பொது மக்கள் யாரும் அருகில் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி பழனிச்சாமி, ஜெகதீசன் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீது வழக்கு கொடுத்துவிடுவர் என்று எண்ணி இந்த வழக்கை கொடுத்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.06.03 15:27:21 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 76 of 2020

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பூபதி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ஈஸ்வரன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.06.2025.

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 03.06.2025.**

1) நான் தற்போது ஊத்துக்குழியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தில் ராசாகவுண்டன்பாளையத்தில் குடியிருந்தேன். அ.சா.1 ஜெகதீசன் எனது அண்ணன் ஆவார். கடந்த 07.04.2019 ஆம் தேதி அன்று மாலை 3.00 மணியளவில் நானும், எனது அண்ணனும் குட்டைக்கு இயற்கை உபாதை கழிக்க Splendor இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். அப்போது பழனிச்சாமி, மோகன், சங்கர் ஆகியோர் மது அருந்திக்கொண்டு உட்கார்ந்து இருந்தார்கள். நாங்கள் பாத்ரூம் போவதற்காக வேகமாக சென்றோம். அப்போது எங்களை வேகமாக செல்கிறாயா என்று மிரட்டும் தோனியில் பேசினார்கள். வரும்போது வண்டியை நிறுத்தி சாவியை பிடிங்கிவிட்டு எனது அண்ணனை அடித்தார்கள். நான் உடனே எனது வீட்டிற்கு சென்று எனது அம்மா, பாலவிக்னேஷ், குணசேகரன் ஆகியோர்களை கூட்டி வந்தேன். எனது அம்மா வந்தவுடன் எதற்கு எனது பையனை அடிச்சீங்க என்று கேட்டதற்கு அதற்கு பழனிச்சாமி எனது அம்மாவை பார்த்து தேவிடியா முண்ட என்று சொல்லி திட்டினார்கள். அதற்கு எனது அண்ணனுக்கு கோபம் வந்து அடிக்க சென்றான். அப்போது பழனிச்சாமி, மோகன் இருவரும் எனது அண்ணனை அடித்தார்கள். பாலவிக்னேஷ், குணசேகரன் தடுக்க போனார்கள். அவர்களிடமும் சண்டை போட்டார்கள். அங்கிருந்த ஆட்கள் தடுத்துவிட்டார்கள். போகும்போது பழனிச்சாமி எனது அம்மாவை பார்த்து இந்த முறை தப்புச்சிட்டிங்க உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார். பின்னர் மூவரும் பல்லடம் அரசு மருத்துவமனையில்

சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எனது அண்ணன் போலீசில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

2) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளான்று மாலை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதற்கு பின்னிட்டு இன்று தான் சாட்சி சொல்ல வருகிறேன் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு இடையில் போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது வயது 13 என்றாலும், ஜெகதீசனுக்கு 16 வயது இருக்கும் என்றாலும் சரிதான். நாங்கள் இருவரும் தான் வண்டியில் சென்றோம் என்றால் சரிதான். நான், சாட்சி சொல்ல வந்துள்ள பாலவிக்னேஷ் அனைவரும் ஒன்றாக தான் வந்தோம் என்றால் சரிதான். பாலவிக்னேஷ், குணசேகரன் இருவரும் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றால் சரிதான்.

3) நான் எனது அம்மாவிடம் சொல்வதற்காக வண்டியில் சென்றேனா என்றால் வண்டி ஓட்ட எனக்கு தெரியாது. நான் ஓடிச்சென்றேன். ஒரு 30 நிமிடம் நேரமாகியிருக்குமா என்றால் இல்லை. கால்மணி நேரம் இருக்கும். அப்போது அப்பா, அம்மா, நான் ஆகிய மூவரும் ஒரே வாகனத்தில் வந்தோமா அல்லது தனித்தனி வாகனத்தில் வந்தோமா என்றால் ஒரே வாகனத்தில் வந்தோம். அம்மா, அப்பா ஒரு வாகனத்தில் வந்தார்கள். நான் நடந்து வந்தேன் என்றால் சரிதான். நான் நடந்து சென்று பார்ப்பதற்கு பிரச்சனை முடிந்துவிட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் பாலவிக்னேஷ், குணசேகரன் வந்தார்கள் என்றால் சரிதான். பாலவிக்னேஷ், குணசேகரன் வீடு 4, 5 வீடு தள்ளி உள்ளது என்றாலும், அவர்கள் அதற்கு பின்னிட்டு தான் வந்தார்கள் என்றாலும் சரிதான்.

4) பின்னிட்டு நான், பாலவிக்னேஷ், குணசேகரன் மூவரும் எனது அம்மா, எனது அண்ணனை மருத்துவனைக்கு அழைத்துச்சென்றோம் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் அழைத்துச்சென்றோம் என்றால் அதே பைக்கில் தான் அழைத்துச் சென்றோம். பாலவிக்னேஷ், குணசேகரன் ஆகியோரின் அப்பா அப்போது வந்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். அப்பாவிற்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். என்ன படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு வரை

படித்துள்ளேன். எதிரி பழனிச்சாமிக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். அவருக்கு இடது முழங்கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். நானும், அண்ணன் ஜெகதீஸ்வரனும் இளவர் என்பதால் வாகனத்தில் வேகமாக சென்று பழனிச்சாமி மீது மோத சென்றதால் பழனிச்சாமி எங்களிடம் வேகமாக ஓட்டவேண்டாம் என்று சொன்னார் என்றால் சரிதான். அதற்கு நாங்கள் கோவப்பட்டு எனது அப்பா, அம்மாவை அழைத்து வந்து எதிரி பழனிச்சாமியை அடித்து காயத்தை ஏற்படுத்தினோம் என்றால் ஓடி வந்ததால் எனக்கு தெரியவில்லை. எலும்பு முறிவு ஏற்பட்டதால் அந்த வழக்கிலிருந்து தப்பிக்கவேண்டி எனது சகோதரரை வைத்து பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது சங்கர் இல்லை என்றால் அதற்கு பின்னிட்டு தான் வந்தார். முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை முதல் தகவல் அறிக்கை பார்த்து சென்னேனா அல்லது போலீசார் வாக்குமூலத்தை பார்த்து சொன்னேனா என்றால் போலீசார் வாக்குமூலத்தை பார்த்து சொன்னேன்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.06.03 15:27:28 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.